## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்

## வினா விடை நேரம்

## வினா எண் 312

## தலைப்பு: இன்றைய சமுதாயத்தின் மனப்போக்கு

### நம் அன்புக்குரிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 60 -65 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

**கேள்வி :ஸ்வாமி நம் பாரத தேசம் மதசார்பற்ற அரசமைப்பு சட்டத்தை கொண்டதாகும்.ஆனால் அரசியல் கட்சிகளோ மதசார்பற்ற என்ற கோட்பாட்டை தங்கள் ஆதாயத்துக்கு பயன்படுத்துகின்றன.தாங்கள் இதை பற்றி எங்களுக்கு தெளிவு படுத்த வேண்டும் ஸ்வாமி.**

**ஸ்வாமியின் பதில்:மதசார்பற்ற என்றால் கடவுள் மறுப்பு என்று பொருள் அல்ல.மதசார்பற்ற நாடு என்றால் ஹிரண்யகசிபு ஆளுகின்ற நாடு ம் அல்ல. ஒவ்வொரு குடிமகனும் மற்றவர்களின் நம்பிக்கையை எதிர்க்காமல் தங்கள் நம்பிக்கைகளை ஸ்வதர்மாவை கடைபிடிக்கலாம் என்பதுதான் பொருள்.**
**சனாதன தர்மம் என்பதே மதசார்பற்ற சித்தாந்தம்தான்.**
**கீதையிலே பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார்**
**ஒவ்வொருவரும் தமக்கான ஸ்வதர்மாவை கடைபிடிக்க வேண்டுமே தவிர பரதர்மாவை அல்ல.**
**இங்கே ஸ்வதர்மா என்பது ஜாதியுடனோ தொழிலுடனோ சம்மந்தபட்டது அல்ல.**
**ஸ்வதர்மா என்பது ஆத்ம தர்மா அதாவது ஆத்ம உணர்வை பெறுவதை குறிக்கின்றது.**
**அனாத்ம தர்மா என்பது ஆத்மாவைவிட்டு விலகி உலகியலான செயல்களில் ஈடுபடுவதை குறிப்பதாகும்.**

**அடுத்த கேள்வி:**
**ஸ்வாமி இன்று பல சர்வதேச நிறுவனங்கள் உலக அமைதிக்காக பாடுபடுவதாக கூறிகொள்கின்றன.ஆனால் அதற்கான சரியான முனைப்போ கொள்கை சித்தாந்தங்களோ அவர்களிடம் இருப்பதாக தெரியவில்லை.**
**இப்படி இருக்கும் போது உலக அமைதி எவ்வாறு சாத்தியமாகும் ஸ்வாமி.**

**ஸ்வாமி யின் பதில்:**
**அவர்களுடைய அணுகுமுறை பழுதானது.**
**அமைதி எங்கே இருக்கிறது.**
**உங்களுக்கு உள்ளேயே இருக்கிறது.**
**அமைதி என்பது வெளி உலகில் எங்கும் கிடைக்காது.**

**முதலில் தனிமனிதன் மன அமைதி பெற வேண்டும். பிறகு தன் குடும்பத்தினர் மன அமைதி பெற வழிகாட்ட வேண்டும்.இதனால் சமுதாயமும் நாடும் அமைதி பெறும்.பல உலக நாடுகள் பேரழிவை ஏற்படுத்கூடிய அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து கொண்டே உலக சமாதானத்தை பற்றி பேசுகின்றன.**
**இதுவா அமைதிக்கான வழி.**

**அடுத்த கேள்வி:**
**ஸ்வாமி இன்றைய நாகரீக உலகில் தொன்மையான மதசடங்குகளான வேள்வி, யாகம் இவைகளை அர்த்தமில்லாததாகவும் கேலிக்குரியதாகவும் காலத்திற்கு பொருந்தாததாகவும் பலரும் கருதுகின்றனர்.**
**இதன் காரணம் என்ன ஸ்வாமி.**

**ஸ்வாமியின் பதில்:**
**அறியாமையே இதற்கு காரணமாகும்.**
**உண்மை  தெரியாமல் வஞ்சகத்துடன் சிலர் தூண்டிவிடுகின்ற வெறுப்பு பேச்சுகளும் காரணமாகும்.**
**ஒரு முறை மாவட்ட கலெக்டர் ஓர் கிராமத்திற்கு விஜயம் செய்தார்.அங்கே ஒரு விவசாயி விதை நெல்மணிகளை காற்றில் தூவிக்கொண்டிருப்பதை பார்த்தார்.நெல் மணிகளை இப்படி விரயம் செய்து கொண்டிருக்கிறாயே.இது தவறு என்று சொன்னார்.விவசாயியோ அய்யா  நான் நெல்லை வீணாக்கவில்லை. இன்று என் நிலத்தில் நான் தூவும் இந்த விதைகள் நாளை வளர்ந்து பல மூட்டை நெல்லாக பயன் தரும் என்றார்.**
**அது போல் வேள்வி தீயில் இடப்படும் நெய் மற்றும் பிற பொருட்கள் வீணடிக்கப்படுவதாக சிலர் நினைக்கிறார்கள்.அது உண்மையல்ல.புனிதமான வேத மந்திரங்களை ஜெபித்து கொண்டே**
**வேள்வி தீயில் இடப்படும் இந்த பொருட்கள் உண்டாக்குகின்ற புகை காற்று மண்டலத்தில் உள்ள மாசை நீக்கி சுத்தம் செய்கின்றன.**
**எனவே இந்த சடங்குகளை காலத்திற்கு ஒவ்வாதவை என கேலி செய்வது கடைந்தெடுத்த முட்டாள்தனமாகும்.இது போன்ற சடங்குகளால்தான் காலத்தில் மழை பெய்கிறது.வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள சடங்கு சம்பிரதாங்கள் அனைத்துமே மனித குலத்திற்கு நன்மையும் அமைதியையும் ஆனந்த்தையும் அளிக்க வல்லதாகும்.**

**அடுத்த கேள்வி:**
**ஸ்வாமி எங்களுக்கு மதம் ஆன்மீகம் நன்னெறிகள் அறிவியல் அரசியல் இவை பற்றியெல்லாம் தயவுசெய்து எடுத்து சொல்லுங்கள் ஸ்வாமி**

**ஸ்வாமியின் பதில்:**
**நான் சொல்லுகின்ற மூன்று கோட்பாடுகளை கடைபிடித்தால் நீங்கள் தனி மனிதனாகவோ சமுதாயமாகவோ அனைத்து துறைகளிலும் முன்னேறி செல்ல முடியும்.**
**ஒன்று கடவுளிடத்தில் அன்பு கொள்ளவது.**
**இரண்டாவது தீய செயல்கள் செய்வதற்கு அஞ்சுவது.**

மூன்றாவது சமுதாய பொது வெளியில் நன்னடத்தை பின்பற்றுவது.
கடவுள் நம்பிக்கை இருந்தால்தான் உங்களுக்கு பாவம் செய்ய பயம் உண்டாகும்.
அப்போது சமுதாய நன்னடத்தையும் வந்து விடும்.
நான் என் மாணவர்களுக்கு அடிக்கடி சொல்வது இது தான்.எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன் இது ஸ்வாமிக்கு பிடிக்குமா அவர் இதை அனுமதிப்பாரா என்று கேட்டு கொள்ளுங்கள்.
ஸ்வாமியின் மீது நீங்கள் வைத்திருக்கின்ற அன்பு நிச்சயமாக தீய செயல்கள் செய்ய உங்களை அனுமதிக்காது.
கடலிலே ஆக்ரோஷமான அலைகள் பாறைகளின் மீது மீண்டும் மீண்டும் மோதுகின்றன.ஆனால் அந்த பாறைகளோ சிறிதும் அசையாமல் உறுதியுடன் நிற்கின்றன.அது போல் கடவுளின் மேல் நீங்கள் கொள்ளும் நம்பிக்கையில் என்ன கஷ்டங்கள் துயரங்கள் தோல்விகள் வந்தாலும் உறுதியாக இருக்க வேண்டும்.
யாராவது கடவுள் இல்லை என்று சொன்னால் எனக்கு கடவுள் இருக்கிறார்.என் நம்பிக்கையில் தலையிட நீ யார் என்று கேளுங்கள்.
என் நம்பிக்கை யை இழித்து பேசுவதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது என்று எதிர்த்து கேளுங்கள்.
தேவுடுன்னாடு அதாவது கடவுள் இருக்கிறார் என்ற
ஐந்தெழுத்து மந்திரத்தையும்
ஸம்ஸயாத்மாவநாஸ்யதி அதாவது கடவுள் இருக்கிறாரா என்று சந்தேகப்படுவது உயிரில்லாது இறந்துபோவதற்கு சமம் என்ற
எட்டெழுத்து மந்திரத்தையும் ஒரு போதும் மறந்து விடாதீர்கள்.
கடவுள் இல்லை என்று சொல்பவர்கள் பரிதாபத்துக்குறியவர்கள்.
கடவுள் எங்கும் இருக்கிறார்,இதோ இங்கேயும் இருக்கிறார் என்பதே சத்யமாகும்.

மனிதன் பாவங்கள் செய்து கொண்டே போகிறான்.ஆனால் அதன் விளைவுகளை சந்திக்க அஞ்சுகிறான்.
புண்ணியத்தின் பலன் வேண்டும் என விரும்புகிற மனிதன் பாவம் செய்வதை மட்டும் நிறுத்துவதே இல்லை.
இவ்வாறு இருக்கும் போது நல்ல விளைவுகளை எதிர்பார்பது முட்டாள்தனமானது அல்லவா.ஒவ்வொரு செயலுக்கும் எதிர்வினை உண்டு என்பதை
எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருங்கள்.
இது உங்களுக்கு நன்கு புரியும் போது பாபச்செயல்களில் ஈடுபட மாட்டீர்கள்.
எனவே கடவுள் மீது அன்பு செலுத்துங்கள்.
பாவங்கள் செய்ய அஞ்சுங்கள்.
அப்போது தானாகவே சமுதாய நன்னடத்தையும் உங்களுக்கு கை வந்து விடும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி பலரும் கலாசாரத்தை பற்றி பேசுகிறார்கள்.
அதன் மேன்மையை பற்றி எங்களுக்கு எடுத்து சொல்லுங்கள் ஸ்வாமி.

**ஸ்வாமியின் பதில்:**
**கலாசாரம் என்பது ஒவ்வொருவரும்பின்பற்ற வேண்டிய வாழ்க்கை முறையாகும். கலாசாரத்தை பின்பற்றாத மனிதன் ஒரு அசுரனை போல் ஆவான்.அவன் தன் மதிப்பிலிருந்து கீழிறங்கி அழிவது  நிச்சயம்.**
**கடல் நீர் உப்பானது.மனித வாழ்கையும் கடல்நீர் போல தான்.கடவுளின் அருள் என்பது கடல் நீரின் மேல் விழுகின்ற சூரிய ஒளியை போன்றதாகும்.அதனால் கடல் நீர் சுத்தமாவது போல் மனித வாழ்க்கையும் பண்படுகிறது.**
**அப்போது அதன் மதிப்பும் உயருகிறது.**
**ஒரு சிறு இரும்பு துண்டு விலையுயர்ந்த கை கடிகாராமாக ஆக்கப்படுகிறது அல்லவா.அந்த செயல்முறையே கடிகாரத்தை உருவாக்குகிறது**
**ஒரு சாதாரண கல்,பாறையாக இருக்கும் வரை அதற்கு மதிப்பில்லை.**
**ஆனால் சிற்பி அந்த கல்லில் அழகான கிருஷ்ண விக்ரஹத்தை வடிக்கும் போது அதன் மதிப்பு கூடி விடுகிறது.**
**அனைவரின் காலிலும் மிதிபட்ட பாறை இப்போது அனைவரும் வழிபடுகின்ற கடவுள் விக்ரஹமாக மாறியதற்கு காரணம் செயல் முறை உருவாக்கம்தான்.**
**கலாசரத்தை, முறையான வாழ்கைமுறையை கடைபிடிக்காத போது மக்கள் ஒற்றுமையில் கூட பிரிவினையை காண ஆரம்பித்து விடுகிறார்கள்.**
**ஒரு ஊசியானது பிரிந்திருக்கின்ற கிழிந்து விட்ட துணியை ஒன்றாக சேர்த்து விடுகிறது.இதுவே கலாசாரத்தின் சிறப்பாகும்.**
**ஒரு கத்தரிக்கோலோநன்றாக இருக்கிற துணியைகூட துண்டுகளாக வெட்டி விடுகிறது.இது கலாசாரம் இல்லாத அவல நிலையை குறிப்பதாகும்.**

**அனைவருக்கும் நன்றி.**
**நம் ஸ்வாமியின் தெய்வீக அருளுரைகளை வரும் நாட்களில் நாம் மேலும் பார்க்கலாம்.**
**ஜெய் சாயிராம்.**